# பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்திற்கு காணியொன்றை அல்லது கட்டடமொன்றை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

வரையறுக்கப்பட்ட கல்விச்சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடனுதவிச் சங்கத்தின் பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்திற்காக காணியொன்றை/கட்டடமொன்றுடனான காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அந்த காணி கட்டடம் பொலன்னறுவை நகர எல்லைக்குள் பிரதான வீதியொன்றிற்கு அல்லது குறுக்கு வீதியொன்றின் முகப்பாக அமைந்துள்ள நீர், மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகளுடன் 10 - 15 பேர்சஸ் அளவான காணித் துண்டொன்றாக இருத்தல் வேண்டும். **(கட்டடமொன்றுடனான காணி எனின் விசேட கவனம் செலுத்தப்படும்)**

**காணி தொடர்பாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :-**

- பிரித்து வேறாக்கப்பட்ட தூய உறுதியுடன் சிக்கலற்ற காணியொன்றாக இருத்தல் வேண்டும்.
- காணியின் நில அளவையாளர் வரைபடம் நகர சபையின் அனுமதியுடன் இருக்க வேண்டுமென்பதுடன், கட்டடமொன்று காணப்படும் காணி எனின் அந்த கட்டடத்தின் வரைபடத்திற்கு நகர சபையின் அனுமதியுடன் இருத்தல் வேண்டும்.
- இதற்கான விண்ணப்பப்படிவத்தை சங்கத்தின் பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்தினால், பிரதான அலுவலகத்தினால் அல்லது www.edcs.lk வலைத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் உறுதியின் பிரதி, நில அளவையாளர் வரைபடம், கட்டடமொன்று காணப்படின், அந்த வரைபடம் மற்றும் கட்டடத்தின் புகைப்படமொன்று மற்றும் காணியை அடைய முடியுமான வீதி விபரங்களையும் உள்ளடக்கி மேற்படி விபரங்களுடன் விலைமனுக்களை பதிவுத்தபாலில் அல்லது கையால் கொண்டுவந்து 2026.03.27 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் பிரதான தலைவர், வரையறுக்கப்பட்ட கல்விச்சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடனுதவிச் சங்கம், இல.204, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.
- விலைமனுக்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் "காணி/ கட்டடத்திற்கான விலைமனுக்கள் - பொலன்னறுவை" எனக் குறிப்பிடல் வேண்டும்.
- அத்தினம் பி.ப.12.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் விலைமனுக்கள் சமர்ப்பித்தவர்களினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நபருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு கலந்துகொள்ள முடியும்.
- காணி/கட்டடம் சங்கத்தினால் பரீட்சிக்கப்படுவதுடன் தெரிவு செய்வது தொடர்பாக கௌரவ பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.

**எம்.ஜீ.பீ.எல். லால் குமார**
**பிரதான தலைவர்,**
வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடனுதவிச் சங்கம்
இல.294, காலி வீதி, கொழும்பு - 03.

மின்னஞ்சல் முகவரி : - edcsboardroom@gmail.com
தொலைபேசி இலக்கம் : - 011-2266000 EX- 1001/1022